ஆடி | July 2014

A quarterly newsletter from the Roja Muthiah Research Library

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் காலாண்டிதழ்

roja ital

ரோஜாஇதழ்

FREE CIRCULATION VOL.1 ISSUE 3

அயோத்திதாசர் **பார்வையில்** விரியும் **ஔவையாரின்** மாற்று வரலாறு

01 ஔவை என்கிற பெயர் முதிர்ந்த அறிவின் குறியீடாகவே கையாளப்பட்டுள்ளது.

பழைய **திருப்பெருந்துறைப்** புராணம்

04 இந்த நூல் திருப்பெருந்துறை தலச்சிறப்பை, மூர்த்தி, தலம், தீர்த்தம் அடிப்படைகளில் விளக்குகிறது.

சிந்துவெளி **எழுத்தாய்வுக்கு** ஹேராஸ் பாதிரியாரின் **பங்களிப்பு**

06 தான் சுமார் 1800 சிந்துவெளிப் பனுவல்களின் பொருளைக் கண்டறிந்திருப்பதாகக் கூறுகிறார்.

# அயோத்திதாசர் பார்வையில் விரியும் ஔவையாரின் மாற்று வரலாறு

ஸ்டாலின் ராஜாங்கம், உதவிப் பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

தமிழிலக்கிய வரலாற்றில் நெடிய மரபைக்கொண்ட ஔவையார் பற்றிய நம்முடைய அறிதல்களை மாற்றி பார்ப்பதற்கான சான்றுகள் பெருகிவருகின்றன. ஔவையார் பற்றி பல்வேறு எதிரும் புதிருமான கருத்துகள் ஆய்வுத்தளத்தில் வெளிப்பட்டுள்ளன. ஔவையார்களின் எண்ணிக்கை, காலம், சமயம் சார்ந்த பல்வேறு கருத்துகள் வெளிப்பட்டிருப்பினும் இரண்டு ஔவை வாழ்ந்தனர் என்றும் முருகனோடு தொடர்புடைய கதையாயிருப்பதால் சைவ சமயத்தவர் என்றும் பெரும்பான்மையோரால் ஏற்கப்படிருக்கிறது. இந்நிலையில் ஔவையார் சமணம் அல்லது பௌத்தமரபில் இயங்கியவர் என்றும் பிற்கால கதைகள் மூலமே அவர் சைவராக்கிக் கொள்ளப்பட்டார் என்றும் இக்கட்டுரை முன் வைக்கிறது. அவரை சமணராக கருதுவதற்கான சில சான்றுகள் தமிழில் ஏற்கெனவே காட்டப்பட்டுள்ளன என்றாலும் அவற்றை புதிய வாசிப்போடு ஒன்றிணைக்க இங்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

ஔவையார் பற்றி இன்றைக்கு நம்பப்படும் எந்த கதைக்கும் சங்க பாடல்களில் இடமில்லை. அவர் அதியனோடு தோழமை பூண்டவர் என்பதும் அதியமான் ஔவையாருக்கு நெல்லிக்கனியை அளித்தான் (புறநானூறு 91-ம் பாடல்) என்பவை சங்கப்பாடல்களால் அறியப்படும் செய்திகளாகும். சங்க இலக்கியத்தில் சிறுகுறிப்பாக காணப்படும் செய்திகள் பிற்காலப் புலவர்களால் விரிவாக்கியும் மாறுபடுத்தியும் வளர்த்தெடுக்கப்பட்டன. சான்றாக அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி அளித்தான் என்ற சங்க இலக்கியச் செய்தி ஔவை பந்தன் என்பவரிடமிருந்து நெல்லிக்கனியைப் பெற்றார் என்று பிற்காலத்தில் வளர்த்தெடுக்கப்பட்டதை கூறலாம். அதே போல் பாரிமகளிருக்கு கபிலர் மணம்செய்வித்தார் என்ற சங்கப்பாடல் செய்தி பிற்கால தனிப்பாடல்களில் ஔவையே அம்மகளிரை புரந்தளித்தார் என்றும் அம்மகளிரின் மணவிழாவிற்கு மூவேந்தர்களை அழைத்தார் என்றும் மணவோலை எழுத விநாயகரை அழைத்தார் என்றும் மாற்றப்பட்டது. அதே போல அதியமான் தந்த நெல்லிக்கனியை உண்டதால் சங்ககாலம் தொடங்கி நீண்ட காலம் வாழ்ந்தார் என்றும் சொல்லப்பட்டு சங்ககால ஔவையையும் பல நூற்றாண்டுகள் பின்னே ஔவையார் பெயரில் அறியப்பட்டவர்களையும் ஒரே ஔவையாராக சாதிப்பதும் நடந்திருக்கிறது. மொத்தத்தில் நம் காலத்தில் வழங்கப்படும் ஔவையாரின் சரித்திரம் உரிய சான்றுகளாலோ முறைப்படியான வரிசையாலோ நிறுவப்படவில்லை என்பது தெளிவு. உரையாசிரியர்களும் சங்க இலக்கியப் பதிப்பாசிரியர்களும் பிற்கால புலவர்களும் வழங்கிய ஔவையார் பற்றிய குறிப்புகளே அவர் பற்றிய இன்றைய சரித்திரம்.

உண்மையில் ஔவை என்கிற பெயர் முதிர்ந்த அறிவின் குறியீடாகவே கையாளப்பட்டுள்ளது, அறிவின் துணைகொண்டு நீதிநெறிகளை பாடி பரப்பியவர். அறிவில் மூத்தவளை அனுபவத்தில் மூத்த முதியவளாக கருதவைத்திருக்கிறது. மூத்தவள் என்பது ஒரு குழுவிற்கு மூத்தவள், வழிகாட்டி, அம்மை என்றெல்லாம் பொருள் பெற்று விரிகிறது. ஐ என்பது தலைமை குறிக்கும் சொல். ஐ பெண்பால் விகுதி பெறும்போது ஐயை ஆகிவிடுகிறது. ஔவையார் என்றால் தெலுங்கில் பாட்டி. கன்னடத்தில் மூத்தவர். சங்க இலக்கியத்தில் தாய்த்தெய்வத்தை குறிக்கும் பெயர் அவ்வை என்கிற சொல்லோடு தொடர்பு பெற்றிருக்கிறது. வெற்றித்தருகிற அன்னையை கொற்ற + அவ்வை என்பர். அதுவே கொற்றவை என்ற சங்க இலக்கிய தாய்த்தெய்வத்தைக் குறிக்கிறது.

புறநானூற்றில் ஔவையார் பாடிய

“நாடா கொன்றோ: காடாகொன்றோ:
அவலாகொன்றோ: மிசையா கொன்றோ:
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை: வாழியநிலனே”

என்கிற பாடல் பௌத்தமத தம்மபத பாடலின் நேரடியான தழுவல் என்பதை தனிநாயகம் அடிகள், க. த. திருநாவுக்கரசு உள்ளிட்டோரின் ஆய்வுகளும் மற்றும்பிற சான்றுகளும் காட்டியுள்ளன. இவ்வாறு சங்கபாடல்களிலேயே ஔவையார் பாடல்களை பௌத்தத்தோடு தொடர்புபடுத்துவதற்கான சான்றுகள் உள்ளன. மேலும் ஔவையாரின் புறப்பாடல்கள் அவளை போர் மறுப்புச் செய்திகளோடு தொடர்புபடுத்துகின்றன. இவை சமணமரபோடு தொடர்புடையதாகும்.

இதற்கடுத்து குறளில் காணப்படும் “செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்” (குறள் எண்:167) என்கிற சொல்லாட்சியால் ஔவை என்கிற சொல் மூத்தாளை சுட்டிநிற்பதை பார்க்கலாம். சிலப்பதிகாரத்தில் வரும் அவ்வை யுயிர் வீவிங் கேட்டாயோ தோழி! (சிலப்பதிகாரம் 29-ம் காதை) என்கிற வரியால் ஔவை என்ற பெயர் தாய் என்ற பொருளில் பயின்று வருவதை பார்க்கலாம். அதேபோல ஐயை என்கிற பாத்திரமொன்றும் அக்காப்பியத்தில் இடம்பெறுகிறது. சங்கப்பாடல்களுக்குப் பின் அச்சொல் சமண-பௌத்த மரபைச் சேர்ந்த நூல்களான குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, சூளாமணி ஆகிய நூல்களில் தான் அதிகம் இடம்பெறுகிறது. இதனை “அவ்வை எனும் சொல் பெண் துறவியைப் பிற்காலத்தில் குறித்தது என்பதை சூடாமணி நிகண்டு சிந்தாமணி வழக்காற்றால் அறிகிறோம்” (ப.31) என்கிறார் தாயம்மாள் அறவாணன். அதன் மூலம் சமண சமயத்தில் துறவு பூண்டு அறபணியாற்றிய பெண் துறவியை மூத்தவளாகவும், அம்மையாகவும், வழிகாட்டியாகவும் கருதி ஔவை என்றழைத்திருக்கின்றனர் என்பதை அறியலாம்.

ஆதி நிகண்டாகிய திவாகர நிகண்டில் மூன்றாம் விலங்கின் பெயர்த்தொகுதி இறுதியில்

“அவ்வை பாடிய அம்பர்கிழவன்
தேன்தார்ச் சேந்தன் தெரிசொல் திவாகரத்துள்...”

என்ற பாடலடி வருகிறது. இதன் காலம் கி. பி. 8ம் நூற்றாண்டு என்பர். மேலும் ஔவையார் பற்றி நூலெழுதிய முனைவர் தமிழண்ணல் இவரைப்பற்றி வேறு குறிப்பு கிடைக்கவில்லை, சேந்தனைப் பாடியதாக திவாகர முனிவர் குறிப்பதால் இவர் சமணராய் இருக்கவும் வாய்ப்புண்டு (ப.85) என்கிறார். மேலே கூறிய சிந்தாமணி உள்ளிட்ட சமண காப்பியங்களின் காலமும் தமிழண்ணல் கருதும் காலமும் ஏறக்குறைய ஒன்றேயாகும். இதே காலத்தில் ஔவையாரை சைவமரபோடு தொடர்புப்படுத்தும் எந்தக்கதையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் இயக்கியர் வழிபாடுகளாக இருந்தவை இன்றைக்கு இயக்கியர் என்றறியாமலேயே மக்களால் பல்வேறு பெயர்களில் அம்மன் வழிபாடுகளாக பின்பற்றப்படுகின்றன. சமணத்தீர்த்தங்கரர்களின் காவல்தெய்வங்களாக வழங்கிய சமணசமய பெண் தெய்வங்களே இயக்கியர். 23ம் தீர்த்தங்கரராகிய பார்சுவநாதரின் இயக்கியாகிய பத்மாவதியைக்குறிக்கும் முற்காலப் பாண்டியர் கல்வெட்டு இவளை மூதாட்டியாக காட்டியுள்ளது என்கிறார் இயக்கி வழிபாடு நூலாசிரியர் வெ. வேதாச்சலம். மேலும் சமணத்தில் இயக்கியை அவ்வை பதுமம் ஆகிய பெயர்களில் குறித்துள்ளதாகவும் காட்டுகிறார். இடைக்காலத்தில் சமணத்திலேயே ஔவையை கிழவியாக காட்டும் மரபு தொடங்கிவிட்டதாகத் தெரிகிறது. அதுவே பின்னால் சைவ மரபுக்கு ஔவையை பெயர்க்கும் போது தொடர்ந்திருக்கிறது. இப்பின்னணியில் சமணபௌத்த அறநூல் மரபை பின்பற்றி ஔவையார் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் போன்ற நீதிநூல்களை பாடியிருக்கவேண்டும். ஆனால் அதற்குப் பின்னால் வெளிப்படையான சமயசார்பு நூல்களையும் ஔவையார் பாடியதாக தனிப்பாடல்களையும் பிற்காலத்தில் சேர்த்தனர். இதே காலத்தில் தான் அவரைப்பற்றி இன்று வரையிலும் நிலவும் கதைதளும் உண்டாக்கப்பட்டன. ஏடுகள் அச்சுக்கு மாறிய காலத்தில் இக்கதைகள் அச்சுக்கு கொணரப்பட்டு உண்மையாக்கப்பட்டுவிட்டன.

ஆத்திச்சூடி கொன்றை வேந்தன் பாவடிவத்திற்கும் தனிப்பாடல் வடிவத்திற்கும் வேற்றுமை உண்டு என்றுக் கூறும் தாயம்மாள் அறவாணன் சமண சமயத்திலுள்ள சில சடங்கு சம்பிரதாயங்களை சைவசமயம் ஈர்த்துக்கொண்டது. சான்று சொல்லாமை, புலால் உண்ணாமை, கள் உண்ணாமை முதலியன. பண்டைய சைவசமய அமைப்பில் திருமணமே செய்துகொள்ளாமல் முழுமையான சமயத்தொண்டை ஏற்கும் பெண் சன்னியாசினி முறை இல்லை. சைவ சமயத்தார் சமண பௌத்ததிலிருந்து எடுத்துக்கொண்ட ஒரு முறையே பெண்சன்னியாசினி முறையாகும். இதன் எதிரொலியே அவ்வை எனும் இளம்பெண் திருமணத்தை வெறுத்து இறைவனின் அருளால் துறவு பூண்ட கதையாகும் என்கிறார்.

தமிழகத்தில் ஔவையார் பெயரில் ஏழு கோயில்களும் இன்றைக்கு உள்ளன. இவற்றுள் அதிக இடங்களில் சமண பெண்தெய்வமரபோடு தொடர்புடையதாகவே விளங்குகிறது. குறிப்பாக குமரி மாவட்ட ஔவையார் கோயில்கள் ஔவையை முழுமையாக சமணமரபோடு தொடர்புபடுத்துகின்றன. இப்பகுதியில் தான் சமணசமய இயக்கியான பகவதி வழிபாடு அதிகம். ஔவையை பகவதி என்றழைக்கும் மரபு கல்வெட்டிலும் உண்டு. எனவே இயக்கி (இசக்கியம்மன்) பகவதியம்மன் ஔவையாரம்மன் ஆகிய பெயர்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புகொண்டவையாக விளங்குகின்றன. இவை சமணக்கோயில்களேயென்று நா. வானமாமலையும் எழுதுகிறார். எனினும் மக்கள் இசக்கியம்மனை வணங்குவதாகவே ஔவையை வணங்குகின்றனர். ஏனென்றால் ஔவையார் தான் இசக்கியாக இருக்கிறார்.

தமிழகத்தில் இன்று வழங்கும் அம்மன் வழிபாடுகளுக்கெல்லாம் ஔவை கதையில் வேர் இருப்பதாக அயோத்திதாசர் எழுதுகிறார். மக்களின் உடல் நோய்க்கு மருந்தளித்து வேம்புமர நிழலுற்ற ஔவையார் மக்களின் மன அழுக்குகளை நீக்க பௌத்த மத திரிபிடக நூல்களுக்கு வழிநூலாக ஆத்திச்சுவடி குன்றை வேந்தன் வெற்றிஞானம் ஆகிய மூன்று வாசகங்களையும் இயற்றியளித்தார்

என்று விளக்குகின்றார். அம்மூன்று நூல்களுக்கும் அவர் உரையும் எழுதினார். அவரால் அதிகம் பயன்படுத்தப்படும் நிகண்டிலிருந்து இதற்கான சான்றை காட்டினார்.

"மரகதவல்லி பூகமர நிழலுற்ற வஞ்சி
பரமசுந்தரி இயக்கி பகவதியம்மை யெங்கள்
அருகனை முடிதரித்தாள் அம்பிகை அறத்தின் செல்வி
தருமதேவதை பேரம்பாலிகை யென்றுஞ்
சாற்றலாமே" (சூடாமணி நிகண்டு)

என்பதே அச்செய்யுள் ஆகும்.

சமணம் என்பதை பௌத்தத்திற்குள் அடக்குவதால் அவரது கருத்தில் சமணமும் பௌத்தமும் ஒன்றே. நிகண்டின்படி ஔவை அவர் அம்பிகையம்மன் என்றே குறிப்பிடுகிறார். இன்றைக்கு மக்கள் வழக்காற்றில் அம்மன் விழா மேற்கொள்ளப்படும் விதத்தை தம் விளக்கத்திற்குள் கொணர்ந்தார். ஔவை அம்மனாக வணங்கப்பட்ட கதையொன்றை அவர் விவரிக்கிறார். அதாவது புந்நாட்டை சேர்ந்த சுந்திரவாகு என்ற அரசனுக்கு அம்பிகாதேவி என்ற பெண்குழந்தை பிறந்து வளர்ந்து கல்விகேள்விகளில் சிறந்து விளங்கியது. அச்சிறுமி மணவாழ்க்கையை மறுத்து பெண்களுக்கான பௌத்த சங்கத்தில் சேர விரும்பினாள். அவள் விருப்பத்தை தட்டமுடியாத அரசன் தாய்மாமன் மூலம் பொட்டுகட்டி பெண்கள் சங்கத்தில் சேர்த்துவிட்டான். அவள் தங்கும் வியாரத்துக்காக (பௌத்த விகார்) நிலமும் தானமாக தந்தான். பிறகு மக்களை துன்புறுத்திய நோயை விரட்டும் மார்க்கம் கூறினாள். நீதிநெறியை காட்டும் வகையில் பாடல்களை பாடினாள். பிறகு அவள் மறைந்த இடத்தில் ஓர் உருவம் எழுப்பி மக்கள் வணங்க ஆரம்பித்தனர் என்கிறார் (பக். 31-32 தொகுதி II) அக்கதையை அயோத்தி தாசர் புனைகிறார் என்றே நாம் கருதுவோம். ஆனால் அப்படியொரு வரலாற்றை ஏடொன்றில் படித்தே தருவதாக அவர் கூறுகிறார்.

குமரி மாவட்டத்தின் வரகுணன் கால செப்பேடு ஒன்றிற்கு கவிமணி கூறும் விளக்கம் இப்பகுதியில் சமணசமய பெண் துறவியர் இருந்தனர் என்பதற்கு ஆதாரமாகிறது என்றுக்கூறும் (ப. 135) தாயம்மாள் அறவாணன் அச்செப்பேட்டில் இடம்பெற்றுள்ள வரலாற்றை விவரிக்கிறார். அவை: மணவாழ்க்கையை வெறுத்துக் கன்னிகையாகவேயிருந்து கடவுள் வழிபாட்டில் தம் காலத்தை கழிக்க விரும்பிய பெண்கள் தம்மை கடவுள் திருவடிகளில் சமர்ப்பணம் செய்துவிடுகின்ற வழக்கம் பண்டைநாளில் இருந்து வந்தது. இவ்விதமே ஆய்குலத்தை சேர்ந்தவளும் அரசனின் உறவினருமான முருகன் சேந்தி என்பவள் கடவுள் வழிபாட்டில் தன்னை ஈடுபடுத்த துணிந்தபோது அரசன் அவளை கடவுள் திருவடியில் காணிக்கை வைத்து அவள் செலவுக்காக நிலமும் விட்டுக்கொடுத்தார் என்று எழுதுகிறார். முருகன் சேந்தி ஆய்குல மன்னர் வரகுணனுக்குத் தமக்கையாகவோ மகளாகவோ இருந்திருக்கலாம். மேற்கண்ட செய்தி ஔவையாரோடு இணைத்து நோக்கத்தக்கது (ப. 136) என்கிறார்.

இந்த கதை அயோத்திதாசர் கூறிய ஔவையார் கதையோடு சிற்சில வேறுபாடுகள் தவிர்த்து அப்படியே ஒத்துப்போகிறது. எனவே அயோத்திதாசர் ஏடொன்றிலிருந்து அளித்த கதை வேறிடத்தில் செப்பேட்டு ஒன்றிலும் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே இக்கதை அக்காலத்தில் பரவலாக வெவ்வேறு இடங்களிலும் வழங்கியிருக்கிறது என்பதை அறிகிறோம், இவ்வாறு அயோத்திதாசர் தரும் பௌத்த பண்பாட்டு ஆதாரங்கள் பிற சான்றுகளோடு பொருத்தப்படும்போது மேலும் துவக்கமடைகிறது. ஔவை வரலாறு அவற்றுள் ஒன்றே. ◆

## கணினி சார் தரவுகள் பாதுகாப்பு

கணினி சார் தரவுகளைப் பதிவு செய்ய தகுந்த சேமிப்பு கருவிகளை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். முன்பு தரவுகளைப் பதிவு செய்ய குறுந்தகடுகளே (CD / DVD) பயன்படுத்தப்பட்டு வந்தன. இன்று நிலைவட்டு இயக்கி (Hard Disk Drive) பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. இன்றளவில், எந்த கருவியில் சேமித்து வைத்தாலும் அது நிரந்தர தீர்வு அல்ல. ஏனென்றால் மேற்சொன்ன சேமிப்பு கருவிகளின் ஆயுள் 5 முதல் 7 வருடங்கள் தான். சேமிப்பு கருவிகளைத் தகுந்த முறையில் பாதுகாக்கவில்லை என்றால் இடையில் பழுதடையவும் வாய்ப்புள்ளது. ஆகவே, சேமிப்பு கருவிகளில் உள்ள எண்ணிம தரவுகளை 2 அல்லது 3 வருடங்களுக்கு ஒரு முறை மற்றொரு கருவியில் மாற்றிக்கொண்டே இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் எண்ணிம தரவுகளை ஒன்றுக்கு மேற்பட்ட கருவிகளில் சேகரித்து வைக்க வேண்டும். அதாவது பல பிரதிகளை எடுத்து வைக்க வேண்டும்.

# பழைய திருப்பெருந்துறைப் புராணம்

முனைவர் சு. வேங்கடராமன், ஆட்சிக் குழு உறுப்பினர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

### முன்னுரை

பழைய திருப்பெருந்துறைப் புராணம். இப்போது ஆவுடையார் கோயில் என்று வழங்கப்படும் திருப்பெருந்துறைத் தலபுராணம் ஆகும். இதன் ஆசிரியர் சுந்தரலிங்க முனிவர். இவர் சுந்தர முனிவர் எனவும் அழைக்கப்படுகிறார். திருவாவடுதுறை ஆதீனத்து, சிற்றம்பலத் தம்பிரானின் மாணவர் நூலின் பாயிரத்தால் இது தெரியவருகிறது. பிற்காலத்தில், திருவாவடுதுறை ஆதீனப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, திருப்பெருந்துறைப் புராணம் ஒன்றைப் பாடினார். அது 1892-ல் உ. வே. சாமிநாத அய்யரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே அதற்கு மூலமான இந்த நூல் பழைய திருப்பெருந்துறைப் புராணம் எனப்படுகிறது. தமிழில் தல புராணங்கள் பெருகிய கி. பி. 16-18 ஆம் நூற்றாண்டுக் கால அளவில் இது தோன்றியிருக்கக் கூடும். 1976-இல் தஞ்சை சரசுவதி மகால், புலவர் ச. பாலசுந்தரம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இதை வெளியிட்டது.


தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு — 158

சுந்தரலிங்க முனிவர் இயற்றிய

திருப்பெருந்துறைப் புராணம்

(குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்

பேராசிரியர் புலவர் ச. பாலசுந்தரம்

துணை முதல்வர்

கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

தஞ்சை சரசுவதி மகால் நிருவாகக் கமிட்டியினருக்காகக்

கௌரவ காரியதரிசி

வித்துவான் அ. வடிவேலன்

அவர்களால் வெளியிடப்பட்டது

கி. பி. 1976 விலை ரூ. 86/-

அட்டைப் படம் - திருப்பெருந்துறைப் புராணம்

### நூல் அமைப்பு

தல புராண இலக்கிய மரபின்படி இந்த நூல் திருப்பெருந்துறை தலச்சிறப்பை, மூர்த்தி, தலம், தீர்த்தம் அடிப்படைகளில் விளக்குகிறது. இந்த நூல், புராண மரபின்படி சூத முனிவர் தன் சீடர்களுக்குக் கதை கூறும் முறையில் உள்ளது. தமிழ் மரபில், சூதர் என்பவர் கதை கூறுபவர்; அவையில் அரசனை நின்று புகழ்பவர்; அரசனுக்குப் பள்ளியெழுச்சி (துயிலெடை நிலை) பாடுபவர். சூதர் கதை சொல்பவராக இந்தியப் புராண மரபில் இடம் பெறுவதற்குக் தமிழ்மரபு அடிப்படையாகும். இந்த நூல், கடவுள் வாழ்த்து முதலாக 58 சருக்கங்களைக் கொண்டுள்ளது. இப்போது 1948 பாடல்கள் உள்ளன. 94 பாடல்களை உடைய ஒரு சருக்கம் முழுவதுமாகக் கிடைக்கவில்லை. இந்த நூல் வடமொழியிலுள்ள ஆதி கயிலாய மான்மியத்தை முதன் நூலகக் கொண்டு தமிழில் பாடப்பட்டுள்ளது. ஆதி கைலாயம், சிவபுரம், திருப்பெருந்துறை, ஆவுடையார் கோயில் யாவும் ஒன்றே. இத்தலம், மாணிக்க வாசகரை இறைவன் ஆட்கொண்டு, குருவாகி நின்று உபதேசித்த தலம். திருப்பெருந்துறையில் ஈசன் குருந்த வடிவில் எழுந்தருளியுள்ளான். ஆத்ம நாதர் என ஈசனும், ஆன்ம நாயகி (யோகாம்பிகை) என இறைவியும் அழைக்கப்படுகின்றனர். இங்கு எண்ணற்ற தீர்த்தங்கள் உள்ளன. அதனால் பெருந்துறை எனப் பெயர் பெற்றது.

முதல் 48 சருக்கங்கள் தல புராண அமைப்பில் அமைந்துள்ளன. இறுதி 9 சருக்கங்கள் மாணிக்கவாசகர் வரலாறும், திருவாசகம், திருக்கோவையார் சிறப்பும் கூறுவதாக உள்ளன. இறுதிச்சருக்கம் நூற்பயன் கூறுகிறது. மாணிக்க வாசக வரலாறு கூறும் முறையில், பிற தலபுராணங்களிலிருந்து மாறுபட்டுள்ளது. பொதுவாகத் தலபுராணங்கள், தலச்சிறப்பை மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற அளவில் கூறுவதாக அமையும். இதற்கு மாறாக திருவிளையாடல் புராணங்கள் (இரண்டும்) ஞானசம்பந்தர் மாணிக்கவாசகர் வரலாற்று நிகழ்வுகளைக் கூறுகின்றன. அந்த முறையில் கடம்பவனபுராணம், சுந்தர பாண்டியம், பெருந்துறைப் புராணம், உத்தரகோசமங்கை புராணம் ஆகியன மாணிக்க வாசகர் வரலாற்றை விரிவாகக் கூறுகின்றன.

மாணிக்க வாசகர் வரலாறு கடவுள் மாமுனிவரால் கி. பி. 14ஆம் நூற்றாண்டில், திருவாதவூரடிகள் புராணம் என்ற பெயரில் அருமையாகப் பாடப்பட்டுள்ளது. அடியார் வரலாறு, புராணம் என்ற பெயரில் பாடப்படுவது, தமிழ் மரபில் காணப்படுவதாகும். பெரிய புராணம், வாதவூரடிகள் புராணம் இதற்குச் சான்று. அடியார் வரலாற்றை அவருடன் தொடர்புடைய தல புராணங்களிலும் பாடும் மரபைக் காண்கிறோம். இந்த அடிப்படையில், முன்னமே கடவுள் மாமுனிவர் பாடிய மாணிக்கவாசகரின் வரலாற்றைச் சுந்தரலிங்க முனிவர், மாணிக்கவாசகர் அவதாரம் தொடங்கி, தில்லையில் ஈசனுடன் ஒன்று கலந்தது முடிய 8 சருக்கங்களில் இந்த நூலில் பாடியுள்ளார். அத்துடன் 3 சருக்கங்களில், திருவாசகம், திருக்கோவையார் சிறப்புக்களை விரித்துரைத்துள்ளார். ஒரு வகையில் திருவாசகத்தின் உரைபோல இச்சருக்கங்கள் அமைந்துள்ளன.

### கவிதை உரை

மூலநூலுக்குக் கவிதையில் உரை காண்பது தமிழ் மரபில் காணப்படும் புதுமையாகும். மூல நூலுக்கு உரை வழக்கமாக உரைநடையில்தான் எழுதப்படும். இலக்கண, இலக்கிய, சமய தத்துவ நூல்களுக்குத் தமிழில் உரைகள் இவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளன. கவிதைக்கு கவிதையிலே உரை எழுதும் மரபு புதுமையானது. தமிழ் மரபில் இது இடம் பெற்றுள்ளது. ஞானசம்பந்தர் மதுரையில் சமணர்களுடன் புனல்வாதம் செய்தபோது பாடிய ‘வாழ்க அந்தணர்’ என்னும் திருப்பாசுரம் எனப்படும் பதிகம் பாடினார். பெரிய புராணத்தில் இதற்கு விளக்கமாகச் சேக்கிழார் 22 பாடல்களைப் பாடியுள்ளார். சம்பந்தரின் பாடல்களுக்குச் சேக்கிழார் கவிதையில் செய்த உரை இது. அந்த முறையில் சுந்தரலிங்க முனிவர் பெருந்துறைப் புராணத்தில் 3 சருக்கங்களைத் (116 பாடல்களில்) திருவாசக உரையாக அமைத்துள்ளார். மூல நூலில் உள்ள தோய்வு இவ்வாறு கவிதை உரை செய்யத் தூண்டியுள்ளது.

மாணிக்கவாசகரை ஆட்கொண்டு அவருக்காக மண் சுமந்து, கூலி கொண்டு, பாண்டிய மன்னனால் பிரம்படிப்பட்ட இறைவன், வாதவூராருக்குக் காட்சி தருகின்றான். சிவத்தலங்கள் தோறும் சென்று ஈசனை மாணிக்கவாசகர் வழிபடுகிறார். இந்த நிகழ்வை மாணிக்கவாசகரின் கீர்த்தி திரு அகவல் அடிப்படையில் 14 பாடல்களில் சுந்தர முனிவர் கவிதை உரையாகப்

பாடியுள்ளார். மாணிக்கவாசகருக்குத் தலங்கள் தோறும் காட்சி கொடுத்த சருக்கத்தில்(1827-1840) இது இடம்பெறுகிறது.

'தேசிக வடிவாய் மிக்க திருக்கழுக்குன்றிற் கண்டு மாசனா முருவு காட்டி மயக்கறுத்த தாண்டா யென்று' (பாடல் 1839)

என்பது திருப்பெருந்துறைப் புராணத்தில் இடம் பெறுவது இது. கழுக்குன்றத்தனில் வழுக்காதிருந்தும் (கீர்த்தி திரு அகவல், அடி 89) என்னும் மணிவாசகத்திற்கு உரிய உரையாகும். திருக்கழுக்குன்றில் ஈசன், மணிவாசகருக்குக் குரு வடிவில் காட்சிதந்ததுடன், கணக்கிலா திருக்கோலங்களைக் காட்டியிருக்கிறான். இந்த அனுபவத்தை அவர் திருக்கழுக்குன்றப் பதிகத்தில் பாடியிருக்கிறார். சுந்தர முனிவர் அப்பதிகம் முழுவதையும், இவ்வடிகளில் வெளிப்படுத்துகிறார். திருவாசகத்தை எழுத்தெண்ணிப்படித்து அதில் தான் கலந்து பாட்டின் பொருள் உணர்தந்தவருக்கு மட்டுமே இக்கவிதை உரை புரியும்.

புத்தரை வாதில் வென்ற சருக்கம் என்னும் பகுதி, திருச்சாழலுக்கு விளக்கவுரையாக உள்ளது. மணிவாசகரின் திருச்சாழல் 20 பாடல்களைக் கொண்டது. சுந்தர முனிவர் அதற்கு 20 விருத்தப்பாக்களில் உரை செய்கிறார். கருத்தை விளக்குவதோடு மணிவாசகரின் சொற்களைக் கொண்டு சுந்தரமுனிவர் கவிதை பாடுவது இலக்கிய மரபில் புதுமையாகும். 'பூசுவதும் வெண்ணீறு, பூண்பதுவும் பொங்கரவம்' (திருச்சாழல் 1) என்பது மூலம். 'பூசுகின்றதும் வெண்ணீறு மேநிமேற் பூண்பதும்படப் பொங்கரவம்' (பெருந்துறை புராணம் 1860) என்பது உரை. மூல நூலின் சொல்களைக் கொண்டே உரை செய்வது நுட்பமானதும், புதுமையானதுமாகும். திருச்சாழலில் இரண்டாம் அடியில்காணேடிஎன்றும்,நான்காம்அடியில்சாழலோ என்றும் வருகின்ற அமைப்பை உரையாசிரியரும் அப்படியே பின்பற்றுகிறார். மணிவாசகர் வினவ, ஊமைப்பெண் பதில் சொல்வதுமாகச் சாழல் அமைந்துள்ளது. சுந்தர முனிவர் இதனை முதல் பாடலில் (1859) குறிப்பிடுகிறார். 'வினா கேட்பது பாதியும்... விடை பாதியும்' என்று கூறுகிறார். இறைவன் திருநீற்றை ஊமைப் பெண்ணுக்கு வழங்கி 'சம்புவின் பெருமையெல்லாம் ஏடி நீ சாற்றுக' என்று வருவது திருவாசகக் கவிதை பிறந்த சூழலை நமக்கு வெளிப்படுத்துகிறது.

மணிவாசகர் இறைவனோடு கலந்த பின்னர் திருவாசகச் சிறப்பு என்னும் சருகத்தில் 26 பாடல்களில் திருவாசகம், திருக்கோவையார் கருத்துக்களை சுந்தர முனிவர் கூறுகிறார். இதுவும், சூத முனிவர் தம் மாணவர்களுக்குக் கூறுவதாக உள்ளது. சிவபுராணம் தொடங்கி, அச்சோ பதிகம் ஈறாக உள்ள 51 பகுதிகளின் பொருள் முதல் 24 பாடல்களில் இடம் பெறுகின்றன. பின் இரு பாடல்கள் திருக்கோவையார் கருத்தைச் சொல்லுகிறது. சிவபுராணம், ஈசனின் திருநாமம் தொடங்கி வாழ்கவென வாழ்த்தும் அருட்குறிப்பாக உள்ளது என்பதை முதல் பாடல் கூறுகிறது. திருவாசகத்திற்கு அமைந்துள்ள பதிப்பு, உரை ஆகிவற்றையும் இச்சருக்கம் கூறும் கருத்து முறையையும் ஒப்பிட்டு ஆய்வது பயன்தரும். மரபு வழியாகத் திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதியும் கூறும் உட்கருத்து எப்போது, யாரால் முதல் முதலாக முறைப்படுத்தப்பட்டது என்ற வினாவிற்கு -விடைகாண இந்த ஒப்பீடு முயற்சி பயன்தரும். மணிவாசகர் பாடிய பின்னர் நெடுங்காலம் கழித்து, 8ஆம் திருமுறையாக அது தொகுக்கப்படுகிறது. பின்னர் அதற்கு உரைகாணப்படுகிறது. இடையில் திருக்கோயில்களில் ஓதப்பெறும் நிலை, மணிவாசகருக்குப் படிமம் எடுத்து விழாக் கொண்டாடும் நிலை ஏற்பட்டு விட்டன. இந்த அடிப்படையில், பிற்காலத்தில் தல புராணங்கள் தோன்றுகின்றன. சேக்கிழார், தம் காலத்தில் பெருவழக்குப் பெற்றிருந்தும், திருவாசகம், திருக்கோவையார், மணிவாசகர் வரலாறு என்பவற்றைப் பெரிய புராணத்தில் பாடாத குறைநீக்க, கடவுள் மாமுனிவரும், பிற தலபுராண ஆசிரியரும் இவ்வாறு உருகி உருகிப் பாடியுள்ளனர். தமிழ் மரபில் திருவாசகமும் மணிவாசகர் வரலாறும் அனைவரையும் ஈர்த்துள்ளது.

ஈசன் மட்டுமல்ல, ஈசனைப்பாடிய மாணிக்கவாசகரும் 'பேசப் பெரும்பொருள் ஆனாய் நீயே' என்ற நிலையைப் பெற்றிருக்கிறார். திருவாசகம், அதன் பொருளான ஈசன் இரண்டும் வேறு வேறு அல்ல என்பதுதான் இதன் அடிப்படை. சுந்தர முனிவர் இதனை நன்கு உணர்ந்திருக்கிறார். வைகைக் கரையில் மன்னனால் பிரம்படிபட்ட ஈசன் மறைந்திட, தத்தம் உடம்பில் அடியும், வைகை மணலில் ஈசன் காலடிச்சுவடும் கண்ட மன்னனும் மக்களும் உண்மை உணர்ந்தனர். அச்சூழலில், மாணிக்கவாசகர் உணர்வைச் சுந்தர முனிவர் பாடுவது, திருவாசகம் போல உருக்கமான பாடல்கள், 'மண்ணெடுத்துச் சென்னியின் மேல் வைக்க அடியேன் பொருட்டால்... என்றழுவார். புண்ணுறுமோ உன்னுடைய பொன்மேனி... நீபட்ட அடிகண்டும் இருந்தேனே. செம்மேனி எல்லாம் சேறும் புழுதியுமே சேர்ந்த நிறம் கண்டு... கீறி உடல் போக்காமை கேடுவுற்று இருந்தேனே' (1793, 1794) என்று வரும் பாடல்கள் இதற்குச் சான்று. இறைவன் மணிவாசகர் பொருட்டுக் கூலியாளாக வந்து பாண்டிநாட்டைச் சிவலோகம் ஆக்கினான். அவனுடைய மண்வெட்டி, மழுவோ; கையிலுள்ள கபாலம் மண் அள்ளும் கூடையோ; தலையிலுள்ள சும்மாடு அறுகின் தாரோ; அல்லது கொன்றைக் குழையோ என்றெல்லாம் மணிவாசகர் உருகுவதாகச் சுந்தர முனிவர் பாடுகிறார். இவ்வாறு திருப்பெருந்துறைப் புராணம் தலபுராணமாகப் பாடப்பட்டாலும், திருவாசக உரையாக அமைந்திருப்பது அறியத்தக்கது. தமிழ்க் கவிதை இந்த ரசவாதத்தைச் செய்துள்ளது. மணிவாசக்கர் வரலாறும் திருவாசகமும் திருப்பெருந்துறைப் புராணத்திற்கு மூலமாக அமைந்தன. சுந்தர முனிவர் தாம் பெற்ற அருளியல் அனுபவத்தைப் பெருந்துறைப் புராணமாக ஆக்கியுள்ளார். அது மீண்டும் திருவாசகமாக ஆகியுள்ளது. தமிழ் மரபில் இப்படிக்கவிதை ஆக்கங்கள் நிகழ்ந்துள்ளன. ◆


**ஆசிரியர் குழு**

சு. தியடோர் பாஸ்கரன்

வ. கீதா

அ. சதீஷ்

க. சுந்தர்


கட்டுரையாளர்களின் கருத்துக்கு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் பொறுப்பல்ல.

# சிந்துவெளி எழுத்தாய்வுக்கு ஹேராஸ் பாதிரியாரின் பங்களிப்பு

ச. சுப்பிரமணியன், ஆராய்ச்சியாளர், சிந்துவெளி ஆராய்ச்சி மையம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

*1924 சர் ஜான் மார்ஷலால் சிந்துவெளிப் பண்பாடு உலகத்திற்கு முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. மொஹெஞ்ஜோதாரோ மற்றும் ஹரப்பாவில் நடந்த அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த சிந்துவெளிக் குறியீடுகள் கொண்ட முத்திரைகள் மற்றும் இதர பொருட்களின் புகைப்படங்கள் அப்போது வெளியாயின. சிந்துவெளி மொழி சமஸ்கிருதம், சுமேரிய, எலமைட் மொழிகளுடன் தொடர்புடையது என்ற கருத்துக்கள் அப்போது வெளியாயின. ஒரு சிலர் சிந்துவெளி எழுத்துக்கள் பிராமி எழுத்துக்களின் முன்னோடி என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது. சர் ஜான் மார்ஷல், சிந்துவெளிப் பண்பாட்டு மக்கள் திராவிட இனத்தவர் என்ற கருத்தை முன் வைத்தார். எனினும், முதலில் சிந்துவெளிக் குறியீடுகளை முந்தைய திராவிட மொழியின் வடிவங்களாகவும், அப்பண்பாட்டை ஒரு முந்தைய திராவிடப் பண்பாடாகவும் அணுகிய பெருமை ஹென்ரி ஹேராஸ் பாதிரியாராரையே சேரும்.*




ஹேராஸ் பாதிரியார் நினைவு தபால் தலை, 1981

ஸ்பெயின் நாட்டின் பாஸ்க் பகுதியில் தோன்றிய இயேசுத் திருச்சபை (Society of Jesus) யில் பாதிரியாராகச் சேர்ந்த ஹென்ரி ஹேராஸ் (1888-1955), 1922 இல் இந்தியா வந்தடைந்தார். பம்பாயிலுள்ள புனித சேவியர் கல்லூரியில் வரலாற்றுப் பாடத்தை கற்பித்து வந்த அவரை இந்திய வரலாற்றின் மீது அவர் கொண்ட ஆர்வம் ஒரு முழுநேர ஆராய்ச்சியாளராக்கியது. அவரால் 1926 இல் தொடங்கப்பட்ட இந்திய வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம் (பிறகு இதன் பெயர் ஹேராஸ் இந்திய சரித்திர பண்பாடு நிறுவனம் என மாற்றப்பட்டது) இன்றும் வரலாற்று ஆராய்ச்சிக்கும் வரலாற்று ஆசிரியர்களை பயிற்றுவிக்கவும் ஒரு சிறந்த நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது.

சிந்துவெளியில் மொஹெஞ்சோதாரோவில் நடந்த அகழ்வாராய்ச்சி பற்றிய விவரங்கள் 1931 இல் சர். ஜான் மார்ஷல் வெளியிட்ட *'மொஹெஞ்சோதாரோவும் சிந்துப் பண்பாடும்'* என்ற பதிப்பு மூலம் உலகத்துக்கு தெரிய வந்தது. இப்பதிப்பு பல அறிஞர்களை சிந்துவெளி ஆய்வில் ஆர்வம் கொள்ளக் காரணமாக இருந்தது. இப்பதிப்பினால் ஈர்க்கப்பட்ட ஹேராஸ் பாதிரியாரும் சிந்துவெளி ஆராய்ச்சியில் முழு முயற்சியுடன் ஈடுபட்டார். 1935 இல் தொடங்கி 1955 வரை சிந்துவெளிப் பண்பாடு மற்றும் குறியீடுகள் குறித்து சுமார் 30க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஹேராஸ் பாதிரியார் எழுதியுள்ளார். இவற்றுள் குறிப்பிடத்தக்கது 1953 இல் பதிப்பிக்கப்பட்ட *"முந்தைய-இந்திய-மத்தியதரைப் பண்பாட்டு ஆய்வுகள் (Studies in Proto-Indo-Mediterranean Culture)"* என்ற நூலாகும். இந்நூலில் ஹேராஸ் பாதிரியார் சிந்துவெளி எழுத்து முந்தைய திராவிட எழுத்தென்றும், சிந்துவெளி மக்கள் முந்தைய-இந்திய-மத்தியதரைப்பகுதி மக்கள் என்றும், இந்தியாவில் தோன்றிய இப்பண்பாடு சுமேரியா, எகிப்து, மத்தியதரைக்கடல் பகுதிக்குப்பரவி, இறுதியில் இங்கிலாந்து வரை சென்றடைந்தது என்ற கருத்தை முன் வைக்கிறார். மேலும், திராவிட மொழியை அடிப்படையாகக் கொண்டு சிந்துவெளிக்குறியீடுகளின் பொருளையும் கண்டறிகிறார்.

இந்நூலின் முதல் அத்தியாயம் சிந்துவெளிப் பண்பாடு, சிந்துவெளிக் குறியீடுகள், அவற்றைப் படித்தறியும் முயற்சிகள் பற்றிய அறிமுகமாக அமைகிறது. மேலும், சிந்துவெளிக்குறியீடுகளை படித்தறிய தனது அணுகுமுறையையும் அதற்கான தனது தற்கோள்களையும் ஹேராஸ் பாதிரியார் இங்கு குறிப்பிடுகிறார். இந்நூலின் இரண்டாம் அத்தியாயத்தில் ஹேராஸ் பாதிரியார் சிந்துவெளி மற்றும் சுமேரியப்பண்பாடுகளை ஒப்பிட்டு அவற்றுக்கிடையேயான நெருக்கத்தை கலந்தாய்வு செய்கிறார். அதன் பின் வரும் அத்தியாயங்களில் பண்டைய எகிப்து மற்றும் இந்தியப் பண்பாடுகளிடையே காணப்பட்ட ஒற்றுமைகள், மீன் மற்றும் பெருவெள்ள தொன்மவியல் கதைகளுக்கிடையே உள்ள ஒற்றுமைகள் ஆராயப்படுகின்றன. இக்கட்டுரையில் சிந்துவெளிக்குறியீடுகளை படித்தறிய ஹேராஸ் பாதிரியார் செய்த முயற்சிகள் குறித்து காண்போம்.

ஹேராஸ் பாதிரியார் தனது சிந்துவெளி ஆராய்ச்சிக்கு அடித்தளமாக கீழ்க்கண்ட கோட்பாடுகளை முன்வைக்கிறார்:

1. சிந்துவெளிப் பண்பாடு ஆரியர் அல்லாதவரைச் சார்ந்தது

2. சிந்துவெளிப் பண்பாட்டு எச்சங்கள் அவை திராவிடப் பண்பாட்டைச் சார்ந்ததென்றே கூறுகின்றன. அக்காலக்கட்டத்தில் இந்தியாவில் வாழ்ந்து வந்த இனங்களில், திராவிட மக்களே மிகவும் முன்னேறி இருந்தனர். மேலும் ரிக் வேதத்தில் கூறப்படும் தாசா/தசயு இனம் திராவிடர்களையே குறிப்பதாகவும், திராவிட மக்கள் அச்சமயம் இந்தியா முழுவதும் பரவியிருந்ததாகவும், ஹேராஸ் பாதிரியார் கூறுகிறார்.

3. இந்நாளைய ப்ராகுயி இனத்தவர் திராவிட மொழி பேசினாலும், அவர்கள் இனத்தால் திராவிடர் அல்லர்.

4. திராவிடர்கள் மத்தியதரை இனத்தின் ஒரு அங்கம்; எட்ரூஸ்கன், மினோவன், சிப்ரியன், எகிப்து, சுமேரிய மற்றும் ஹிடைட் மக்களும் இவ்வினத்தில் அடங்குவர். இவ்வினத் தொடர்பே இப்பகுதி எழுத்துக்களின் உருவ ஒற்றுமைக்குக் காரணம்.

5. சிந்துவெளி மக்களின் மொழி திராவிட மொழி ஆகும்

6. ஆயினும், சிந்துவெளி மக்கள் பேசிய திராவிட

மொழி இந்நாளைய திராவிட மொழிகளிலிருந்து வேறுபட்டது. ஹேராஸ் பாதிரியார் இம்மொழியை முந்தைய திராவிட மொழி (proto-Dravidian) என்றழைக்கிறார்.

7. இம்முந்தைய திராவிட மொழியின் உருபனியலை இந்நாளைய திராவிட மொழிகளின் வேர் சொற்களில் இருந்து பெற முடியும். திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழிகள் என்பதால், சொற்களில் இருந்து ஒட்டுக்களை நீக்குவதில் மூலம் வேர் சொற்களைப் பெறமுடியும்.

8. சிந்துவெளிப் பண்பாடுக் காலத்தின் திராவிட மொழி முற்றும் வளர்ச்சி அடையாத ஒரு மொழியாக இருந்திருக்க வேண்டும்.

9. சிந்துவெளிக்குறியீடுகள் ஓவியமும், ஓசையும் கலந்த குறியீடுகளாகும்.

10. சிந்துவெளிக்குறியீடு அசையோ ஒட்டோ இல்லாமல் ஒரு முழுச்சொல்லாக இருக்கவேண்டும். இச்சொற்கள் வணிகர்கள் அல்லது அவர்கள் உடைமைகளின் பெயரைக் குறிப்பன.

**சிந்துவெளிக் குறியீடுகளைக் கண்டறியும் முறை:**

சிந்துவெளிக்குறியீடுகளைக் கண்டறிய, முதலில் அவற்றின் பொருளை உறுதி செய்ய வேண்டும். பொருளை உறுதி செய்த பிறகு அதற்கு ஒப்பான திராவிட மொழிச் சொல் கண்டெடுக்கப்பட்டு அதனுடன் இணைக்கப்படுகிறது. இதற்காக, ஹேராஸ் பாதிரியார் சிந்துவெளிக்குறியீடுகளை நான்கு தொகுதிகளாகப் பிரிக்கின்றார். முதற்தொகுதி 241 ஓவிய எழுத்துக்களைக் கொண்டது. ஆயினும் இந்நூலில் இவற்றில் 51 ஓவிய எழுத்துக்களே எடுத்துக்காட்டுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஹேராஸ் பாதிரியார் பெரும்பான்மையான ஓவிய எழுத்துக்களை அவற்றின் இயற்கை வடிவம் மூலம் எளிதாக அடையாளம் காண முடியுமென்றும், மற்றவை எளிதாக்கப்பட்ட மரபுவழிக் குறியீடுகள் என்றும் குறிப்பிடுகிறார். ஹேராஸ் பாதிரியார் குறிப்பிடும் ஓவிய எழுத்துக்களின் எடுத்துக்காட்டுக்களை அட்டவணை 1 இல் காணலாம்.

**ஒலிக் குறியீடுகள்:**

ஹேராஸ் பாதிரியாரின் இரண்டாவது தொகுதி 125 ஒலிக் குறியீடுகள் அடங்கியது. ஹேராஸ் பாதிரியார் இக்குறியீடுகளும் ஆரம்பத்தில் ஓவிய எழுத்துக்களாகத் தோன்றியவை என்றாலும், நாளாவட்டத்தில் இவை தம் ஓவியவடிவத்தை இழந்துவிட்டன எனக் கூறுகிறார். இவற்றை படித்தறிய, சுமேரிய, எகிப்து, ஹிட்டைட் மற்றும் சீன மொழிகளில் உள்ள ஒத்த தோற்றமுடைய குறியீடுகளின் உதவியை நாடுகிறார். எடுத்துக்காட்டாக, சுமேரிய மொழியில்  போல் தோற்றத்தில் இருக்கும் ஒரு குறியீட்டுக்கு பொருள் பெரிய என்பதாகும். ஹேராஸ் பாதிரியார் சிந்து வெளிக் குறியீடான க்கு, பேர் என்ற பொருளைத் தருகிறார். ஒலிக் குறியீடுகளின் எடுத்துக்காட்டுக்களை அட்டவணை 2 இல் காணலாம்.

அட்டவணை 1 ஓவியக் குறியீடு

| ஓவியக் குறியீடு | குறிப்பு | பொருள் | ஓவியக் குறியீடு வகை |
|---|---|---|---|
|  | நான்கு கைகளுடைய மனிதன். மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒன்று. இந்தியாவில் கடவுளைச் சித்தரிக்கும் மரபு. | கடவுள், இயற்கைக்கு அப்பாற்பட்டது | இயற்கை வடிவம் |
|  | தாண்டும் மனிதன் | நாட்டியக்காரர், நடனமாடும் கடவுள் | இயற்கை வடிவம் |
|  | நீத்தோர் நினைவுச் சின்னம். | இறப்பு | இயற்கை வடிவம் |
|  | உள்ளடக்கப்பட்ட நான்கு வீடுகள் நகரத்தின் வரை படம் | நகரம் | மரபுவழி |
|  | அறைகள்/ குடியிருப்புக்கள் | நான்கு வீடுகள் | மரபுவழி |

அட்டவணை 2 ஒலிக் குறியீடு

| சுமேரியக் குறியீடு | ஒலிப்பியல் மதிப்பு | பொருள் | சிந்துவெளிக் குறியீடு | ஒலிப்பியல் மதிப்பு | பொருள் |
|---|---|---|---|---|---|
|  | எஸ் | கட்டளை, தீர்ப்பு |  | தீர்ப்பு | கட்டளை, தீர்ப்பு |
|  | தார் | தீர்ப்பளி, மதிப்பிடு |  | தீர் | தீர்ப்பளி, மதிப்பிடு |
|  | உர் | நகரம் |  | பாழி | நகரம் |

*அட்டவணை 3*

| கூட்டுக் குறியீடு | தனிக்குறியீடுகள் | பொருள் | விளக்கம் |
|---|---|---|---|
|  |  | வேளாள் | வேளாளர் குலத்தவர் |
|  |  | நண்டோர் | நண்டூர் மக்கள் |
|  |  | நண்டூர் | ஊர் பெயர் |

முந்தைய-இந்திய-மத்திய தரைப்பகுதி என்ற பொதுவான கருத்திலிருந்து இவை பெறப்பட்டாலும், முற்றிலும் வேறுபட்ட குறியீடுகள் ஒரே பொருளைத் தருவதால், குழப்பம் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, நகரம் என்ற பொருளை இரு வேறுபட்ட குறியீடுகள் - ஓவிய வடிவமாக வும், ஒலி வடிவமாக வும் - குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

**கூட்டுக் குறியீடுகள்:**

ஹேராஸ் பாதிரியாரின் மூன்றாவது தொகுதி 290 கூட்டுக் குறியீடுகளை அடக்கியது. கூட்டுக் குறியீடு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சிந்துவெளிக் குறியீடுகளின் கூட்டாகும். எடுத்துக்காட்டாக, (ஆள்) மற்றும் (பேர்) சேர்ந்து (பேராள்) என்ற கூட்டுக் குறியீடாக உருப்பெறுகிறது. கூட்டுக் குறியீடுகளின் எடுத்துக்காட்டுக்களை அட்டவணை 3 இல் காணலாம்.

வரைநிலை சொற்களை உருவாக்கவும் கூட்டுக் குறியீடுகள் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மீனையும், மீனவக்குலத்தவனையும் (ஒருமை), மீனவக்குலத்தவர்களையும் (பன்மை), அனைத்து மீனவர்களையும் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது என ஹேராஸ் பாதிரியார் கூறுகிறார். இது போன்று, கூட்டுக் குறியீடுகள் இலக்கண வரைநிலை சொற்களையும் தம்முள் கொண்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, (இல் - வீடு), என்ற வரை நிலைச் சொல்லுடன் சேர்ந்து (இல்இல் - வீட்டினுள்) என மாறுகிறது.

**ஒலிக்கூட்டுக் குறியீடுகள்:**

ஹேராஸ் பாதிரியாரின் நான்காவது தொகுதியில் 60 ஒலிக் கூட்டுக் குறியீடுகள் உள்ளன. இரு ஒலிக்கூறுகளின் ஒலி சேர்ந்து ஒரு புதிய ஒலி உருவாதலை இங்கு காண்கிறோம். எடுத்துக்காட்டாக, (ஊர்) மற்றும் (மீன்) சேர்ந்து என்ற புதிய ஒலிக்கூட்டுக் குறியீட்டை உருவாக்கியுள்ளன.

**நிகரான திராவிடச் சொல் அறிதல்:**

சிந்துவெளி குறியீட்டின் நிகரான திராவிடச் சொல்லை அறிய ஹேராஸ் பாதிரியார் இந்நாளைய திராவிட மொழிகளின் சொற்கள் அனைத்தையும் திரட்டி, அவற்றில் மிகத் தொன்மையானவற்றை தேர்ந்தெடுத்து, பின் இச் சொற்களில் மிகப்பொருத்தமானவற்றை சிந்துவெளி குறியீட்டின் நிகரான சொல்லாக்கினார்.

ஹேராஸ் பாதிரியார் சிந்துவெளி மொழியாக தொல்திராவிட மொழியை தேர்ந்தெடுத்ததற்கு சொல் மற்றும் இலக்கணம் சார்ந்த காரணங்களை முன் வைக்கிறார். இவை இந்நூலில் பின்னிணைப்பாகத் தரப்பட்டிருக்கின்றன.

**ஹேராஸ் பாதிரியாரின் பங்களிப்பு - ஒரு பகுப்பாய்வு:**

ஹேராஸ் பாதிரியாரின் ஆய்வுக்கு பெரும் வரவேற்பு இல்லை என்றே கூற வேண்டும். ராபெர்ட் ஹெய்ன்-கெல்டர்ன் தனது மதிப்புரையில் ஹேராஸ் பாதிரியாரின் அணுகுமுறையை குறை கூறியிருந்தார். மகாதேவன் “ஹேராஸ் பாதிரியார்தான் முதன் முதலில் சிந்துவெளி குறியீட்டுப் புதிருக்கு ஓர் திராவிடத்தீர்வை முன் வைத்தவர்” என்று கூறுகிறார். மகாதேவனின் முந்தைய திராவிட அணுகுமுறையும் கண்டறிதலும் ஹேராஸ் பாதிரியாரின் பாதையினின்று மிகவும் வேறுபட்டது. எனினும், மகாதேவனும் குறியீட்டை ‘பாழி’ என்றும், குறியீட்டை ‘மேலகம்’ என்றும் கூறுவது குறிப்பிடத் தக்கது. அஸ்கோ பர்போலா, ஹேராஸ் பாதிரியாரின் முந்தைய திராவிட அணுகுமுறையுடன் உடன்பட்டாலும், ஹேராஸ் பாதிரியாரின் முடிவுகள் தனிப்பட்ட முறையில் வேறு யாராலும் உறுதி செய்யப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். அஸ்கோ பர்போலா குறியீட்டை ஹேராஸ் பாதிரியாரின் வழியில் மீன்/மின் எனக் குறிப்பிடுவதும், அவற்றை ஆதாரமாகக் கொண்டு சிந்துவெளி குறியீடுகளிலிருந்து விண்மீன் கூட்டங்களின் பெயர்களைக் கண்டறிவது கவனிக்கத்தக்கது. டேவிட் மெக்கால்பின், திராவிட எலமைட் மொழிகளுக்கிடையே உள்ள தொடர்புகளைச் சுட்டிக்காட்டி, இவையிரண்டும் ஒரு பொது மொழியிலிருந்து தோன்றியிருக்கலாம் என்ற கருத்தை முன் வைத்துள்ளார். ஆனால், காலின் மாசிகா, இன்று கங்கைச் சமவெளியில் பேசப்படும் மொழிகளில் உள்ள வேளாண்மை குறித்த சொற்களின் வேர் சொற்கள் பல (40% க்கும் மேற்பட்டவை) திராவிட, முண்டா மற்றும் இந்தோ-ஆரிய மொழிகள் அல்லாமல் வேறொரு மொழியைச் (இம்மொழியை மாசிகா X மொழி என அழைக்கிறார்) சார்ந்தவை எனக்குறிப்பிடுகிறார். இத்தகைய ஆராய்ச்சிகள் இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஹேராஸ் பாதிரியார், தான் சுமார் 1800 சிந்துவெளிப் பனுவல்களின் பொருளைக் கண்டறிந்திருப்பதாகக் கூறுகிறார். எனினும், அவற்றில் சிலவற்றையே இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இதுபோன்றே, தான் பொருள் கண்டறிந்த குறியீடுகளின் முழுப்பட்டியலையும் ஹேராஸ் பாதிரியார் இந்நூலில் தரவில்லை. இதனால் ஹேராஸ்

பாதிரியாரின் அணுகுமுறையும், அவரது கண்டறிதலும் நமக்கு முழுவதும் புரிய வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. இது இந்நூலின் பெருங்குறைபாடாகும். இத்தரவுகள் கிடைக்கப்பெறின், ஹேராஸ் பாதிரியாரின் ஆராய்ச்சிப் பணியை நாம் முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடியும். இத்தரவுகளை தேடிக்கண்டுபிடித்து மீண்டும் அவற்றை முழுமையாகப் பதிப்பிப்பதே ஹேராஸ் பாதிரியாருக்கு நாம் ஆற்றும் கடமையாகும்.

*துணை நூல்கள்:*

*1. Heras, Fr. Henry. Studies in Proto-Indo-Mediterranean Culture, Volume 1, Bombay Historical Research Institute, 1953. p.5*

*2. Marshall, John. 1931. Mohenjo-Daro and the Indus Civilisation, Probsthain, London. (Reprint 1973, by Indological Book House, Delhi).*

*3. Robert Heine-Geldern. Studies in Proto-Indo-Mediterranean Culture by H. Heras. Review. Anthropos, Bd. 50, H. 4./6. (1955), pp. 990-992*

*4. Edmund F. Sutcliffe. Studies in Proto-Indo-Mediterranean Culture by H. Heras. Review. An Irish Quarterly Review, Vol. 43, No. 172 (Winter, 1954), pp. 477-479*

*5. Mahadevan, Iravatham. Dravidian models of decipherment of the Indus script: a case study. Tamil Civilization 4 (3 & 4): pp.133-143. 1986.*

*6. Mahadevan, Iravatham. 2011. The Indus Fish Swam in the Great Bath: A New Solution to an Old Riddle. Bulletin of the Indus Research Centre, No. 2. pp 8-9.*

*7. Parpola, Asko. 1994. (Paperback Edition 2000). Deciphering the Indus script. Cambridge. Cambridge Univ. Press. pp 275-277.*

*8. Masica, Colin P. 1979. Aryan and non-Aryan elements in north Indian agriculture, in M. M. Deshpande and P. E. Hook (eds), Aryan and non-Aryan in India. Ann Arbor: The University of Michigan Center for South and Southeast Asian Studies, pp. 55-152.*

*9. McAlpin, David. 1974. Toward Proto-Elamo-Dravidian. Language. Vol. 50 no. 1.*

# நிகழ்வுகள்

### *ஆவணத்திரைப்படம்*

29 ஏப்ரல் 2014- திரு. R. V. ரமணி அவர்கள் இயக்கிய “Hindustan Hamara - This Country is Ours” ஆவணத் திரைப்படம் திரையிடப்பட்டது.

# வரவு

### *நன்கொடை*

திரு. ஸ்ரீராம், முனைவர். ஐராவதம் மகாதேவன் அவர்கள் நூலகத்திற்கு நிதியுதவி அளித்துள்ளனர். அவர்களுக்கு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### *புத்தகங்கள்*

திரு. T. R. பாலசுப்பிரமணியன், திரு. கருப்பன் செட்டி, முனைவர். ஐராவதம் மகாதேவன், திரு. K. R. நரசய்யா, தீக்கதிர் அலுவலகம், Centre for Indian Knowledge Sytems (CIKS) ஆகியோர் நூலகத்திற்கு புத்தகங்களையும் பத்திரிகைகளையும் நன்கொடையாக அளித்துள்ளனர். அவர்களுக்கு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## நன்கொடை

ஏ. எம். எம். அறக்கட்டளையினர் நமது நூலகத்திற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சார்பில் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## வேண்டுகோள்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் கடந்த இருபது ஆண்டுகளாக தமிழ் வரலாற்று ஆவணங்களைச் சேகரித்து பாதுகாத்து ஆய்வாளர்களுக்கு குறிப்புதவி சேவையை இலவசமாக வழங்கிவருகிறது. நூலகம் எடுத்துவரும் இம்முயற்சிக்கு உதவும் வகையில் பலர் நூலகத்திற்கு நூல்கள், பத்திரிகைகளை அன்பளிப்பாக வழங்குவதுடன் நிதியுதவியும் செய்து வருகின்றனர். இவ்வுதவிகளை நூலகத்திற்கு அளித்து நீங்களும் இம்முயற்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம். **(நிதியுதவி அளிப்பவர்களுக்கு 80G வரிவிலக்கு உள்ளது).**

ரோஜாஇதழ்

Book Post

*ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்*
3வது குறுக்குச் சாலை
மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை 600 113
தொலைபேசி : 22542551 / 52
மின்னஞ்சல் : admin@rmrl.in
www.rmrl.in

*Published by G. Sundar on behalf of the Roja Muthiah Research Library, 3rd cross road, Central Polytechnic Campus, Taramani, Chennai 600113*
*Printed by Rm. Subbiah, Asian Printers, 25, Peters road, Chennai 600014. Editor: G. Sundar*